உளி - 7 | ஓசை - 11 | ஏப்ரல் - 2024 | திங்களிதழ்

# படைப்பு

## கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவு எண்: 521/2018

**நிறுவனர் & ஆசிரியர்:**
ஜின்னா அஸ்மி

**நிர்வாகக் குழு:**
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

**ஆசிரியர் குழு:**
படைப்பு தேர்வுக்குழுமம்

**இதழ் உருவாக்க உதவி:**
ஷென்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

**வடிவமைப்பு:**
ஆர்.பிரகாஷ்

**இணையதள முகவரி:**
padaippu.com

**அலுவலக முகவரி:**
படைப்பு குழுமம்
# 8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607 002

படைப்பு பிரைவேட் லிமிடெட்
# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024

admin@padaippu.com
+91 73388 97788, 73388 47788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வரவேண்டுமெனில் முகநூல் படைப்புக் குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

சங்கரி சிவகணேசன் - 4
அ.ராஜ்குமார் - 5
யாழினி - 6
ச.ஆனந்தகுமார் - 7
சாய் மீரா - 8
ஐ.தர்மசிங் - 9
தங்கேஸ் - 10
நடராஜன் பெருமாள் - 11
வி. வி.கலைச்செல்வி - 12
சுரேஷ்பாபு ராசேந்திரன் - 12
பூங்கோதை கனகராஜன் - 13
எஸ்.பி.வீரப்பன் - 13
ஷர்ஜிலா பர்வீன் யாகூப் - 14
கா.வெங்கடேஸ்வரன் - 14
மணி அமரன் - 14
கவியெழுத்து விஜயகுமார் - 15
வினோத் பரமானந்தன் - 16
சுயம்பு - 17
இயலிசம் - 18
மு.முபாரக் - 18
கா.ரஹ்மத்துல்லாஹ் - 19
செ.ரா.கிருஷ்ணகுமாரி - 20
ரா.ராஜசேகர் - 20
சந்துரு ஆர்.சி - 21
பாண்டியன் காழரம் துலாலிங்கன் - 21
பிரியா பாஸ்கரன் - 22
தேனி முத்து பிரசாத் - 23
மலர்மைந்தன் - 23
ருத்ரா - 23
மா. காளிதாஸ் - 24
பாபு - 25
கிருஷ்ணா கணேஷ் - 25
ரிஸ்கா முக்தார் - 26
மெஹராஜ்பேகம் - 27
நட்சத்திரப் பாடகன் - 27
கோவை புதியவன் - 28
கோவை. நா.கி.பிரசாத் - 28
கவிதை ராஜா - 28
ஜெயதேவன் - 29
மகேஷ் சிபி - 30
மா.மனோகரன் - 31
நயினார் - 32
கருவை ந.ஸ்டாலின் - 33
நித்யா - 33
எஸ்.பிரேமதாஸ் - 34
நரன் - 35, 36
ஆனந்தபிரபு. கௌ - 37
ஜவஹர் - 37
குமரன் விஜி - 38
குபோதினி - 39



நன்றியும் மன்னிப்பும்
மறுக்கப்படும் வாழ்க்கை
கொஞ்சம் கண்ணீராலும்
மீதி குரோதத்தினாலும்
வன்மத்தினாலும் நிரப்பப்படுகிறது...

ஒரு நீண்ட கண்ணீருக்கு
பிறகான நொடிகளை
தேன் தடவிய
சயனைடு வார்த்தைகள்
தழுவிச் செல்கின்றன...

ஒரு நீண்ட வன்மத்திற்கோ
அல்லது குரோதத்திற்கோ
பின்னான பொழுதுகள்
பல பொய்களாலும் போலிகளாலும்
நிறைந்து வழியும் மயான நாற்றமாய்
சுருண்டுகிடக்கின்றன...

கடல் தாண்டும் அலைகள்
கணத்தில் திரும்பினால் மட்டுமே
கடலின் கருணை அணைத்துக்கொள்கிறது...
தூரமோ நேரமோ ஆகிவிட்டால்
காணாமல் போய்விடும் கருணையால்
கரைகளில் எஞ்சுகின்றன
அலைகளின் கண்ணீர்...

ஆதலால்
மன்னிப்புகளையும்
நன்றிகளையும் பாராட்டிக்கொள்ளுங்கள்...

வாழ்தலின் பொருட்டு
ஏதோவொரு கருணையை
இறுகப் பற்றிக் கொள்வதே
இப்பெருவாழ்வை நகர்த்திட
போதுமென இருக்கிறது...

சங்கரி சிவகணேசன்



ஒற்றை விநாடிக்குள்
கொள்ளை போக
முடிகிறது
அன்பின்
முடிச்சுகளுக்குள்
மட்டுமே
இங்கே ஒருவன்
கொள்ளையடித்துக்
கொண்டிருக்கிறான்
நான் பார்த்துக் கொண்டிருக்க
என்னையே...

உன் கூண்டுக்குள்
பிடிபட்ட
கிளிதான் நான்
நீ...
கிள்ளியெறியும்
நான்கு
நெல்மணிக்காகவா
சீட்டுக்களை
இழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறேன்
புரியாதவனே...

வரைந்த பொழுதில்
தனைமறந்த பிரம்மன்
தவறவிட்ட
தூரிகை எச்சங்களாய்
நாமும்...

அ.ராஜ்குமார்



என்ன அவசரம்
இன்றே தீர்ந்துவிடாத சொற்களோடு
ஒவ்வொரு முறையும்
உன் அறையைத் தட்டுவதாய் அலுத்துக்கொள்கிறாய்

உண்மையில் அவசரமென எதுவுமில்லை
நீண்ட காலமாய் சொற்களின் கணம் தாங்காமல்
சுமந்தலைகிறேன்

இதை வாங்கிக்கொள்
எனக்கு பதில் அவசியமற்றது
நீ வாங்கிக்கொள்
அவ்வளவுதான்

சொற்கள் அழுந்துவதை
இனிமேலும்
தாங்கிக்கொள்ள முடியாது

நம்மைக் கடந்த
வண்ணத்துப்பூச்சியின் நிறம்
உள்ளங்கைகளில் ஒட்டியிருக்க
உன்னைப்பார்த்த நொடி
இதோ நழுவிக்கொண்டிருக்கிறது.

✔ யாழினி



மழையாய் பிறந்திருக்கலாம்...
நிச்சயமாக வெள்ளமாய்
மாறியிருக்க மாட்டேன்...

வெயிலாய் இருந்திருந்தால் கத்தரியில்
வறுத்திருக்க மாட்டேன்...

காற்றாக பிறப்பெடுத்தால் புயலை
நாடு கடத்தி தென்றலாகவே
தவழ்ந்திருப்பேன்...

நெருப்பாய் ஒளிர்ந்திருந்தால்
குடிசைகளை தீண்டும் முன்
தற்கொலை செய்து கொண்டிருப்பேன்...

ஏதோ ஆசிரமத்திலிருந்து பண உதவி
கேட்டு அழைப்பு...
கருணையோடு இணைப்பை துண்டித்து
அந்த எண்ணை தடை செய்தேன்...

ச.ஆனந்தகுமார்



தொட்டி மீனொன்றை
கடல் தன் கரம் நீட்டி
அரவணைத்த போது
வானம் தன் நீலத்தை
பொழிந்திருந்தது

ஆசீர்வதிக்கப்பட்ட நாளொன்றின்
அடுக்கத்தில்
சில மிடறு தேனை
தன் கூட்டில் இட்டு
நிரப்பியிருக்கிறதொரு
தேனி
பல முட்களிடை பட்டுக்கிழிந்த
தன் இறகினோடு
மகிழ்வும் ஒட்ட
நிரம்பியது
ரோஜா தேன்

அலைவூசலின்
அலைவுகளுக்கு
இடையிலான தொலைவிற்கு
உள்ளாகத்தான்
நேற்றும் இன்றும்
இருப்பதான மாயை

விழித்திரை வழி
கடந்த நாட்களின்
இரத்தம் தோய்ந்த பாதம்
முழுதுமாய்
மருதாணிக்கறை
இப்போது
சிவப்பில் பூக்கத்துவங்கிற்று
நீலம்
கொத்துப் பூக்களாய்

✔ சாய் மீரா



உதயத்திற்கும்
அஸ்தமனத்திற்கும்
இடைப்பட்ட பயணம் தான்
பிரமிப்பில் ஆழ்த்துகிறது

ஒருமுகம் முத்தமிடும்
ஒருமுகம் முரண்படும்
ஒருமுகம் புன்னகைக்கும்
ஒருமுகம் ரௌத்திரம் காட்டும்

ஒன்றைத் தழுவுவதும்
ஒன்றை கை கழுவுவதும்
ஒன்றை சுமப்பதும்
ஒன்றை விட்டு விலகுவதும்

வருவதும் போவதுமாய்
வரிசைக் கட்டும்
பல சந்திப்புகள்
இரயில் சிநேகமாய்...

இடையில் வந்தவை
நிரந்தரமல்ல
இடையில் விலகிவிடும்

வரும் போதும்
தனிமை தான்
போகும் போதும்
தனிமை தான்

வந்து விட்டால்
போக வேண்டும் என்பது
பகலுக்கு பின் இரவு போல
தீர்க்கமானது

நான் போகவே போவதில்லை
என்னும் உடல் மொழிகாட்டி
தன்னையே ஏமாற்றிக் கொள்ளும்
மனித மனங்களை
என்னவென்பது

போகட்டும்
மரணத்தின் நாழிகை அறியாத வரை
இந்த அற்ப சந்தோசங்கள்
அழகானவை.

உடையும் மண்பாண்டம் போல
அற்பமானவன் தானே
மனிதன்.

ஐ.தர்மசிங்



போட்டுக் கொடுத்து விட்டு
நமது டிபிஜ வந்து
மறக்காமல் பார்த்துச் செல்லும் மனிதர்களின்
புன்னகைக்கு
 பதில் புன்னகை
அனுப்புவதோடு தொடங்குகிறது
இந்த நாளின் சாபக்கேடு

பிறகு சிக்னலில்
 பச்சை விளக்கு ஒளிர்வதற்குள்
குறைந்தது இரண்டு பேராவது
கார் கண்ணாடி கதவை தட்டி
பிச்சை கேட்கும் போது
வளர்ந்து

பல்பொருள் அங்காடியில்
ஜி பே வேலை செய்யாத போது
பொத்தாம் பொதுவாக
இணையத்தை சபிக்கும் போது
கொஞ்சம் உயர்ந்து

இரண்டு காதுகளிலும் ப்ளூ டூத்தை
மாட்டிக் கொண்டு
மரணத்தை நோக்கி பயணிப்பவன்
பின்னால் அலறும்
லாரிச் சத்தத்தை
அலட்சியப் படுத்திய படி
பயணிக்கும் போது
உச்சத்தை தொட்டு

யாசகம் கேட்பவனின் கைகளில்
ஒரு வசை சொல்லை இட்டு விட்டு
போகும் போது
ஒரு முடிவுக்கு வருகிறது
அது

✔ தங்கேஸ்



## விலகாதிருங்கள்

கைக்கெட்டும் தூரம் தான்
என்றீர்கள்
ஒரு சின்ன திரும்பிப் பார்த்தல்
கூட நிகழவில்லை

இதோ வந்து விடுகிறேன்
என்று சொன்னீர்கள்
நாழிகைகள் மெதுவாக யுகங்கள்
ஆகின்றன

நிச்சயமாக சந்திப்பேனென
உறுதியளித்தீர்கள்
திறந்திருக்கும் கதவுகள்
ஒருநாளும் தட்டப்படவில்லை

முன்னம் ஒருமுறை முடியாது
என்றுவிட்டு நீங்கள்
என்னை சந்தித்ததை மகிழ்வோடு
நினைவு கூர்கிறேன்

இப்போதும் அதையே கனிவோடு
சொல்லியிருக்கலாம்
காத்திருப்பதை நிறுத்தி
ஆறுதலடைந்திருப்பேன்

✔ நடராஜன் பெருமாள்



## வாழ்தல்

இப்போதெல்லாம்
நிறைய நேரம் பேச முடிவதில்லை.
அடிக்கடியும் பேச முடிவதில்லை
ஊரில் இருக்கிற அம்மாவிடம்...

எப்போது பேசினாலும்
நினைவில் நிற்கிற ஏதாவது ஒரு
பழைய கனவை
விஸ்தாரமாகச் சொல்லிக்கொண்டே போகிறாள்
அம்மா...

அம்மாவின்
நீண்ட தனிமை என்பது
கொஞ்சம் கனவுக்குள் வாழ்வது
கொஞ்சம் கடமைக்கு வாழ்வது...

✔ வி. வி.கலைச்செல்வி

## சாபம்

கடைசி
இலையினையும்
இழந்துவிட்ட அந்த
இலையுதிர் கால மரம்

தன்னில்
முழுவதும் பூக்களைப்
பூக்கச் செய்து
அழகாகி விடுகிறது...

இவ்விடம்
இழத்தல் என்பதும்
வரம்.!

✔ சுரேஷ்பாபு ராசேந்திரன்



ஊர் வழிப் போனால்
நெரிசலில் சிக்கி
நேரமாகிறதென்று
ஊருக்குள் செல்லாமல்
ஊரோரம் பாதை அமைக்கிறார்கள்

அம்புக்குறிகள் அடைப்புக்குறிகளுக்குள்ளாகி
இப்போது பாதையிருக்குமிடம்
தோன்றும் அவசரக் கட்டிடங்கள்
தன்னை
ஊராக்கிக் கொள்கின்றன

✔ பூங்கோதை கனகராஜன்

கடல் என்பது கடல் மட்டுமல்ல!
கடல் என்றால் அலை
கடல் என்றால் சுனாமி
கடல் என்றால் மீன்
கடல் என்றால் சிப்பி
கடல் என்றால் அமைதி
கடல் என்றால் ஓசை
இன்னும் எத்தனையோ!
கடல் என்பது ஒரு பெயர்
ஒரு பெயர் என்பது பெயர் மட்டுமல்ல!
உன் பெயரும் எனக்கு அப்படித்தான்!

✔ எஸ்.பி.வீரப்பன்



சட்டென எழுந்த பறவை
படபடத்துக் கொண்டது
கிளை நுனி

✔ ஷர்ஜிலா பர்வீன் யாகூப்

பட்டுப்போன மரம்
பார்த்தும் கலங்கவில்லை நான்.
கிளையில் சில பறவைகள்.

✔ கா.வெங்கடேஸ்வரன்

சின்னதொரு
இளைப்பாருதலுக்குப் பின்
சிறகு விரிக்கிறது பறவை
இத்தனை நேரம்
தாங்கிய போதெல்லாம் இல்லை
பறத்தலுக்குப் பின்தான்
தாளா கனம் கிளைக்கு.

✔ மணி அமரன்



தண்டோரா அடித்து
ஊர் ஊராக
“இன்னாரு” தவறிட்டாரு
என்று சொல்வது அவர்கள்

எழவு வீட்டு வாசலில்
பந்தம் சொந்தம்
துக்கம் விசாரிக்க
பந்தல் போடுவது அவர்கள்

சடலம் ஒரு நாளைக்கு
புத்துணர்வாய் இருக்க
தாரைத் தப்பட்டை
அடிப்பது அவர்கள்

அந்த இசையோடு
காலில் சலங்கை கட்டி
தொண்டத் தண்ணி வத்த
கால் பொத்துப்போக
பாடி ஆடுவது அவர்கள்

சடலத்தை சாத்தி
உறவுகள் கூடி
நீர் மாலை எடுக்க
பந்தல் போடுவது அவர்கள்

ஊர் மெச்சு
புகழஞ்சலி செலுத்த
தேர் செஞ்சு
அத்தேரை மலரால்
ஜோடிப்பதும் அவர்கள்

சுள்ளி பொறுக்கி
மண் சட்டியிலிட்டு
கொல்லி வைக்க
கங்கு கொடுப்பதும் அவர்கள்

சுடுகாட்டில் குழி தோண்டி
சடலத்தை சாத்தி
வைக்கோலுடன் மண் பூசி
இரவு முழுவதும்
கண்விழித்து எரிப்பது அவர்கள்

சடலத்தோடு மட்டும் சகலத்திலும்
அவர்களை வாழவிடுகிறோம்
தாராளமாக இடமும் கொடுக்கிறோம்
ஆனால்,
உயிர்வாழும் மனிதர்களோடு தான்
அவர்களை ஒருபோதும் வாழ
விடாமல் தீண்டாமைச்
சுவரை எழுப்புகிறோம்!

கவியெழுத்து விஜயகுமார்



## நினைவில் காடுள்ள பறவை

காடும்...
கூடும்...
பெருந்தேடலானதால்

பறத்தல் மறந்து
போயிருந்தது
நினைவில்
காடுள்ள பறவைக்கு...

எப்போதாவது
விரிக்கும் சிறகுகளிலும்
சிலுவையில்
அறைந்ததைப்
போல வலிகள்...

நாடில்லா காட்டில்
நன்றாகத்தானிருந்தது
பறவை...

காடில்லா நாட்டில்
வாழ்வது தான்
கடினமாகிப் போனது...

காடறுத்தவர்கள்
தன் கழுத்தையும்
அறுப்பதாய்
அடிக்கடி கனவு
பறவைக்கு...

பறக்கக் கிடைத்த
கொஞ்ச வானத்தில்
நச்சுப் புகை...

தொண்டையை
நெருக்கும்
தொலைப்பேசி
கோபுரங்கள்...

தனக்கான
வனமும்,
வானமும்
அழிக்கப்பட்ட
தவிப்பினூடே

தினமும்
வந்து போகும்
கானகத்தில்
வாழும்
கனவொன்று
நிஜமாகும்
நம்பிக்கையில்...
நினைவில்
காடுள்ள பறவை...

வினோத் பரமானந்தன்



உன் காதலைக் கொண்டு
ஏன் கொல்லைப்புறம் வழியாக வருகிறாய்
நேர் வழியில் வா
என் காதலுக்கு சாதியுமில்லை, மதமுமில்லை...
*
ஏன் இந்த காதலை உணர்த்த
இத்தனை பாடுபடுகிறாய்
குழப்பமென்றாலும்
என்னுள் ஐக்கியமாகிவிடு
பின்புதான் உணர்வாய்
ஞானம் உணர்த்தும் என் காதலும்
ஒரு போதி மரம்தான் என்பதை
*
இன்னும் கரையிலேதான்
நின்று கொண்டிருக்கிறாய்
உனக்கு நீந்த தெரியாதென்றாலும்
பரவாயில்லை... நம்பி ஏறலாம்
நான் கரைசேர்க்கும் கட்டுமரம்தான்
*
குழப்ப சாக்கடைக்குள்
காதலை தேக்காதே
அதன் புனிதத் தன்மை
நாற்றமடிக்கத் தொடங்கி விடும்
*
பொம்மை தொலைத்த குழந்தை போல்
அழுது கொண்டிருக்கிறாய்
நீ தொலைத்ததென்ன பொம்மையா?
ஒரு பெருங் காதலை
*
தவிக்கிறாய்! குழம்புகிறாய்
அர்பணித்தல் இல்லாமல்
கடவுளை எங்ஙனம் உணரமுடியும்?
அதுபோலதான் காதலும்
*
ஒடிந்த சிறகுகளின் காயம் ஆற்றி
பறக்க வேண்டுமென்று முடிவான பிறகு
வானை சிதைக்கலாமா?
*
நாம் இருவருமே
அமைதியாக இருப்போம்
நம் மௌனங்களே
நம் காதலை வளர்க்கும்
*
இந்த இரவின் வானத்தை கடக்க
எத்தனை அவசியமானதாயிருக்கிறது
உன் நினைவுச் சிறகுகள்
*
ஒரு சொல்லெறி போதும்:
என் மௌனப் பாறைகள்
உதிரும் வெறும் மணல் திட்டுதான்
*

✔ சுயம்பு



## காதல் தோல்வி

விழிகளில்
நீர் நிரப்பிக் கொண்டு
வானம் பார்த்து மல்லாந்திருந்த
உடலில்
உயிர் இல்லை
காதல் அருந்தியிருந்தது
அதிகாலைக்கு இதமாக
பூச்சிக்கொல்லி மருந்து தேநீராகியிருந்தது
அண்ணனுக்கு இது
இருபதாவது நினைவு நாள்
அவள் குழந்தைக்கு
இருபதாவது பிறந்தநாள்.

✔ இயலிசம்

இறந்த அப்பாக்களெல்லாம்
நட்சத்திரங்களாகிவிடுகிறார்களென
யாரோ சொன்ன இரவில்
வானம் பார்க்கிறேன்...
அப்பப்பா
எத்தனை நட்சத்திரங்கள்,
அய்யோ பாவம் எத்தனை
அப்பாயில்லா பிள்ளைகள்!

✔ மு.முபாரக்



இரவில் மட்டுமே
உலாவிக்கொண்டிருந்த எலி
பகலிலும் வீட்டிற்குள்
அலையத் தொடங்கியிருக்கிறது.

அதை விரட்டுவதற்கும் கொல்வதற்கும்
நூறு யோசனைகளுக்கும் அதிகமாக
கேட்க வேண்டியதாய் இருந்தது.
அதில் ஒன்றைக்கூடச் செயல்படுத்தியதில்லை.

வாகனப்போக்குவரத்து மிகுந்த சாலையில்
சாதாரணமாகவே ஒதுங்காமல் நடக்கும்
மனிதர்களைப் போலில்லை அது.
சுவற்றின் ஓரமாகவே வரும்
ஓரமாகவே போகும்.
சிறிய அரவம் கேட்டாலும்
திடுக்கிட்டுத் திரும்பிப் போகும்.
அரவம் நின்றதும் திரும்பும்.

ஏதாவதொரு மூலையில்
எதையாவது உருட்டிக்கொண்டிருக்கும்.
தூக்கம் கலைவது எரிச்சல் என்றாலும்
விரட்டுவதற்கான மனம்
கைவந்து சேரவேயில்லை.

இதுவெல்லாம் போகட்டும்.
எல்லாம் வெறுமையாய்க் கிடக்குமிந்த வீட்டில்,
கிழிந்த பாயில் அமர்வதற்கு முகஞ்சுழித்து
உறவுகள் ஒதுக்கிய இந்த வீட்டில்,
நீசத்தண்ணீர் பாத்திரம் கூட
வறண்டு கிடக்குமிந்த வீட்டில்
இந்த எலி மட்டும்
எதற்காக வந்துபோகிறதென்று தெரியவில்லை.

இதே வீட்டில்தான்
இந்த எலியைத் துரத்திப் பிடிக்காத
பூனையொன்றும் வசிக்கிறது.
ஆனால்
அது வீட்டில் இருப்பவர்களைப்போல்
பட்டினியாய் இல்லை.

✔ கா.ரஹ்மத்துல்லாஹ்



ஆறு வித்தியாசங்களை
அரை நிமிடத்தில்
கண்டுபிடிக்கத் தெரிந்தவளுக்கு
அவன் மனதின் மாற்றங்களை
அறிய முடிவதில்லை

குழம்புக் கொதிக்கும்
வாசனையை வைத்து
உப்பு காரச் சுவையை
உணரத் தெரிந்தவளுக்கு
அவன் காதலின் அடர்த்தி
நீர்த்துப் போனதை அறிய முடிவதில்லை

அதீத அன்பைக் கொட்டிக் கொண்டிருந்தவள்
பாத்திரத்தின் ஓட்டையை கவனிக்கவில்லை

அடம்பிடித்து அன்பைப் பெற்றுவிட நினைக்கும்
சிறு குழந்தை இவள்
எண்ணெய் இல்லாத விளக்கில்
வெளிச்சத்தைத் தேடும்
இருள் இவள்.

✔ செ.ரா.கிருஷ்ணகுமாரி

இப்போதெல்லாம்
எல்லோரோடும்

பார்வை
கையசைப்பு
கைகூப்புதல்
சிரிப்பு
சிநேகம்
ஆரத் தழுவுதல்
உடன் நிற்பது

அனைத்திலும்
தொகுதியளவிலான நேசம்
பகுதியென்றில்லை
பற்றிக்கொள்கிறது முழுமையாக

தேர்தல் கால குணம்
தெருவில்
தினம் நடக்கிறது
தேர்தலற்ற பொழுதுகளிலும்

அரசியல்வாதி
அனைவருக்குள்ளும்தானே
பால்பேதமின்றி

✔ ரா.ராஜசேகர்



ஒரே நேரத்தில் இருவரின் பயணமும்
பல மைல்கள் தூரம்
விலகியிருக்கின்றன
எங்களின் கண்கள்
அவன் எகிப்தின் பிரமிடுகளின் ஓரத்தில் யாருடனோ
சென்றுகொண்டிருக்கிறான்
நான் கோஸ்டாரிக்கா
கடற்கரை அழகை வேடிக்கை
பார்த்துக்கொண்டிருக்கிறேன்
திடீரென அவன்
மத்தியத் தரைக்கடல் வழியே தாவி
வெனிஸ்சுக்குள் நுழைகிறான்
நானும் வியட்நாம் தீவுகளில் சஞ்சரிக்கிறேன்
என்னருகில் அமர்ந்திருக்கும்
அவனெதிரில் இருப்பவர்
திரும்பத் திரும்ப ஒரே கவிதையை
வாசித்துக்கொண்டிருக்கிறார்
அவன் பயணம் முடிவுக்கு வருகிறது
துவங்கும்போது ஓரிருமுறை
புன்னகைத்துக்கொண்டதைப்போல
ஒரு புன்னகையை வீசிவிட்டு
இறங்கிச் செல்கிறான்
பிளாட்பார அறிவிப்பு கடக்கிறது
நான் யூ டியூபை அணைத்துவிட்டு
முதல் முறையாய் வெளியில்
வேடிக்கைப் பார்க்கிறேன்
அருகிலிருப்பவர்
கவிதைத் தொகுப்பிலிருந்து
இன்னும் கண்களை விலக்கியதாய் தெரியவில்லை
எங்கள் இருவரைப்போலவே...!

✔ சந்துரு ஆர்.சி

உயரே செல்லுதல் தத்துவத்தின் படி
மனித பிறப்பிற்கு மறுபிறப்பாய் பறக்கும் பறவை
ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு
என்ற நியூட்டனின் மூன்றாம் விதிக்கு
எதிராக உள்ளது
நானே மீண்டும் மீண்டும் முத்தங்கள கொடுப்பதும்
நீ அழகாய் வங்கிக் கொண்டிருப்பதும்
உதிர்ந்த சிறகுகள்
புவியின் மேல் வீழ்ந்து
இசைக்கும் மௌனத்தை
இருதயங்கள் மட்டுமே கேட்கின்றன

✔ பாண்டியன் காழரம் துலாலிங்கன்



## ஆரா

நிழல்கள் நடனமாடும்
கனவுகளின் துணிக்குள் எம்ப்ராய்டரி
செய்யப்பட்டது அவளது பெயர்
சந்திரனின் ஒளியில்
தேங்கி நிற்கும் மெல்லிசையும்
வானத்தை ஆச்சரியத்தின் சாயல்களால்
வர்ணிக்கும் நட்சத்திரத்தூளின்
சிம்பொனியும் அவள்

களைப்புற்ற உள்ளங்களைத் தழுவும்
செஃபிரைப் போன்றது
அவளது அதீத கருணையின் திருவுருவம்
நிற்காத காலம் அவளிடம்
சரணடையும் பொழுதில்
உலகம் எதிர்பார்ப்புடன் வைத்திருக்கிறது
தனது சுவாசத்தை

கற்பகத் தரு முணுமுணுத்த
இரகசியங்களுக்கும்
காலத்தால் மறந்துவிட்ட கதைகளுக்கும்
காவலாளி அவள்

விண்மீன் திரள்களைப்
பிரதிபலிக்கும் கண்களால்
யதார்த்தத்தின் திரைக்கு அப்பால்
விரக்தியின் தெரியாத இருளில்
நட்சத்திரங்களைக்
காண்கிறாள்

அவளது சிரிப்பில்
அச்சங்கள் படுகுழியில் கரைகின்றன
தொடுதலில் இதயம் தேறுதலாகிறது

சாயையின் உலகில் பேரழகாக இருக்கும்
அவள் கணிப்பிற்கு அப்பாற்பட்டவள்.

✔ பிரியா பாஸ்கரன்



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்
உனக்காக காத்திருக்கிறேன்

ஒவ்வொரு முறை
தேவாலய மணி அடிக்கும் போதெல்லாம்
நான் மீண்டும் மீண்டும்
உயிர்த்தெழுகிறேன்
உன் வருகையை
சரி பார்ப்பதற்காக

தேவனை
ஜெபிக்க நீ வரும்போதெல்லாம்
தேகம் முழுவதும்
என் பிரார்த்தனை
ஏற்றி வைத்த மெழுகுவர்த்தியாய் ஒளிர்கிறது

உன் திராட்சை ரச கண்களை
மீண்டும் மீண்டும் தேடுகிறேன் எப்பொழுது
என் பிரார்த்தனைகளுக்கு
ஆமென் சொல்லும் என்று

மெதுவாய் இமை சிமிட்டி விடு
சப்பரத்தேர் போன்று
வலம் வந்து விடுகிறேன்...

✔ தேனி முத்து பிரசாத்

சாலை விபத்து
அழுது கொண்டிருக்கிறாள்
பிள்ளையற்றவள்

✔ மலர்மைந்தன்

## ஜென்

ஒரு கொட்டாங்கச்சியில்
ஏதோ உறிஞ்சிக் கொண்டிருக்கிறார்
நாம் நினைத்துக்
கொண்டிருக்கிறோம்
அது தேனீர் என்று.
மொத்தமாய்
கொந்தளிக்கும்
கடல்கள் அது.
அவர் சொல்கிறார்...
உனக்கு இது பானம்.
எனக்கு இது பாவனை.

✔ ருத்ரா



1.
ஒரேயொரு கொடுக்காப்புளி
கிடைத்தால் போதும்
இந்த வெப்பம் தணிந்து கொள்ளும்
தனக்குத் தானே.

2.
இளைப்பாற இடம் தேடும்
வெப்பத்தின் கால்களில்
எத்தனை ஆணிகள்!

3.
விளையாடித் தீர்ந்துவிடும்
இந்த வெப்பம்.
பிறகு குளிர் ஆடும்
ஒரு சின்னஞ்சிறிய கண்ணாமூச்சி.

4.
ஒரு சிறிய லென்ஸ் கொண்டு
குவிக்கிறான் குளிரை.
பற்றியெரிகிறது
இன்னொரு குளிர்.

5.
மீப்பெருவெளி அன்பு.
குளிரூட்டப்பட்ட தனி அறைகள்
காதலும் காமமும்.

6.
கோப்பைத் தேநீரில்
அவரவர்க்குத் தகுந்தாற்போல்
இரண்டறக் கலந்துள்ளது
கொஞ்சம் வெப்பம்
கொஞ்சம் குளிர்.

7.
முதல்முறை சுடும்போது
கொதிக்கிறது.
அடுத்தடுத்து சுட வைக்க
சுவை கூடிக் குளிர்கிறது.

மா. காளிதாஸ்



எப்போதிருந்து
எந்தன்
உயிர் வளி
ஆனாய் நீ...

நீயற்ற நொடிகளெல்லாம்
மூர்ச்சித்தே கிடக்கிறேன்
நான்...

எப்போதிருந்து
எந்தன் உயிர்த்திரவம்
ஆனாய் நீ...
பாய்வது குறைகையில்
பாலையாகிப் பரிதவிக்கிறேன்
நான்...

ஆகமொத்தம்
சமிக்ஞைகளைத் தவறவிட்ட
நியூரானாய் சதிராடிக்கொண்டிருக்கிறேன்
நான்...

கிருஷ்ணா கணேஷ்

புறாக்கள் வந்தமர்ந்து
திரும்பிய மாடங்களிலெல்லாம்
வெறும் எச்சங்களே
மிச்சங்களாயிருந்தது
நீங்களோ
கிளறிப்பார்த்து
மதங்களை தேடுகிறீர்கள்

பாபு



அவளுக்கென்ன
ராணி போல வாழ்வு
என்பவர்கள்

நெஞ்சடைக்கும்
அவள் துயரங்களை அறிவதில்லை
வெளியிடத்தயங்கும்
அவள் அச்சங்களை அறிவதில்லை
தலையணை நனைக்கும்
அவள் இயலாமைகளை அறிவதில்லை
தனிமையில் வெடிக்கும்
அவள் கேவல்களை அறிவதில்லை

அவளுக்கென்ன
ராணி போல வாழ்வு
என்பவர்களுக்கு

ஒப்பனைகளுக்குள் ஒளிந்துகொண்ட
அவள் உண்மை மனம் தெரிவதில்லை
மௌனங்களுக்குள் மூச்சிரைக்கும்
அவள் வார்த்தைகள் தெரிவதில்லை
துரோகத்தில் வீழ்ந்து மடியும்
அவள் நம்பிக்கைகள் தெரிவதில்லை

இன்னும்
எல்லாம் இருப்பது போல இருந்தும்
எதுவுமே இல்லாதிருக்கும்
அவள் வெற்று வாழ்க்கை தெரிவதில்லை

ஆம்
அவளுக்கென்ன
ராணி போல வாழ்வு
என்கிறார்கள்
ஆள்வதற்கு ஏதுமற்று
அரியணையில் அமர்ந்திருக்கும்
அபலை வாழ்வு அது

பின்னும்
அவளுக்கென்ன
ராணி போல வாழ்வு
என்பவர்களுக்கு
உண்மையில் எல்லாம் தெரிந்திருக்கலாம்
அவளையும்
அவள் வாழ்வையும் தவிர...

✓ ரிஸ்கா முக்தார்



காற்றை
கட்டிப்போட்டு வைத்து
குழந்தைகளின் மனதை
பறக்க விடுகிறான்
பலூன்காரன்

✔ மெஹராஜ்பேகம்

இந்த பிரிவை
நான் கொண்டாடுகிறேன்...
எதுவாக இருப்பினும்
பிடித்தவர்களால்
பிரியத்தோடுக் கொடுத்ததை
எப்படி நிராகரிக்க முடியும்?

✔ நட்சத்திரப் பாடகன்



குழந்தைகள் மாறுவேடப்போட்டி
வேடம் கலைத்தும்
பிரிய மனமில்லை
கடவுளுக்கு

✔ **கோவை புதியவன்**

அந்த மாறுவேடப்போட்டியில்
ஏதோ ஒரு கடவுளின் வேடமிட்டு
பரிசு கிடைக்காத குழந்தையின் பெற்றோர்
பெற்றுச்சென்றனர்
பேயிற்கான முதல்பரிசை!

✔ **கோவை. நா.கி.பிரசாத்**

ஞாயிறைச் செரித்த திங்களொன்றை அவசர
அவசரமாக எழுப்புகிறது விழிப்புமணி

அது வலதும் இடதுமாக முறித்த சோம்பலை
மடித்து வைத்துவிட்டு அரைபோதை ஆசாமியென
அங்கொன்றும் இங்கொன்றுமாக
எட்டு வைக்கிறது அலுவலகம் நோக்கி

விடுமுறைப்பொய்களை அனுமதிக்காத
தாமதக்கதவுகள் திறந்தே கிடக்கின்றன

செவ்வாயோடு புதனும்
வியாழனும் வெள்ளியும்
பின் வரிசையில் நிற்க
வரவேற்பறையில் காத்திருக்கின்றன சனியின்
மீதங்கள்

பழகிப்போன வாரக்கர்ஜனை
வயோதிக ஊழியனை
ஒன்றும் செய்துவிடவில்லை
வாலிபக்கூரையின் விட்டத்தில்தான்
தொங்குகின்றன
அந்த ஞாயிறின் நினைவுகள்.

✔ **கவிதை ராஜா**



பறவை ஊசாலாடிவிட்டு பறந்த கிளையில்
இன்னும் ஆடிக் கொண்டிருக்கிறது
பறவை.

தாத்தா அமர்ந்திருந்து எழுந்த பின்னிருக்கும்
நாற்காலி சூட்டிலும்
தாத்தா இருக்கிறார்.

கலவி முடிந்து விலகிய பின்னும்
கொஞ்சம் எஞ்சியே இருக்கிறது
நிறைவுறாத கலவி.

திருமணம் முடிந்து கணவன்
வீடு சென்ற பின்னும் மகள் இருக்கிறாள்
பிறந்த வீட்டில்.

தலைவன் பேசி முடித்து கூட்டம்
கலைந்த பின்னும் இன்னும்
பேசிக் கொண்டே இருக்கிறான்
வந்தவரிடையே.

மழை நின்ற பின்னும்
மழை பெய்யவே செய்கிறது
மனதில்

முடிந்தவையெல்லாம் முற்றும் அல்ல
முற்றும் என்பது
என்றும் முடிவுறாதது.

ஜெயதேவன்



மிதமிஞ்சிய
ஆக்ஸிலேட்டர் முறுக்கலில்லை
வெட்டி வெட்டி இழுக்கும் வேகமில்லை
சடக்கென்று பிரேக் அடிக்கும்
குலுக்கலில்லை
வெடுக்கென்று ஸ்டீரிங் ஒடித்து
சடக்கென்று திரும்புதலில்லை
தேவையற்ற உறுமுதலில்லை
டயர் உராய்ந்து
ஓட்டம் நிறுத்தப்படவில்லை
சாலையை கஷ்டப்படுத்திவிட்டோம்
என்ற குற்றவுணர்ச்சி
சிறிதுமில்லை
எப்போது கிளம்பினோம்
என்ற பிரக்ஞையுமில்லை
மென்மையான கிளம்புதல்
ஒரு மென்மையான நிறுத்துதலோடு முடிவடைகிறது
கார் ஓட்டும் தருணம்
கவிதையாவது இப்படித்தான்

மகேஷ் சிபி



எங்கே போயின அம்மா சமைத்த அடுப்படியும்
ஊதாங்கோலும் சிமிட்டாவும்!

எங்கே போயின கூரையில் படர்ந்திருந்த சுரைக்
கொடியும்
வேலியில் விளைந்த பாகற் கொடியும்!

எங்கே போயின
உறியில் தொங்கிய
வெல்லப் பானையும்
புளியம் பழங்களும்!

எங்கே போயின எதிர்வீட்டு ஜன்னலுக்கு நான் எழுதிய
கவிதை நோட்டுகளும் அவற்றை ஒளித்து வைத்திருந்த
மர அலமாரியும்!

எங்கே போயின
என் அம்மா அமர்ந்திருந்த முற்றத்து திண்ணைகளும்
அப்பா இளைப்பாறிய
சாய்வு நாற்காலியும்!

எங்கே போயின
அக்கா விரும்பி வளர்த்த டிசம்பர் பூச்செடிகளும்
அவள் கோலத்தில் வைத்த பூசணிப் பூக்களும்!

எங்கே போயின
வேம்பினடியில்
நாங்கள் வணங்கிய மூன்று கல் குலதெய்வமும்
மூடிவைத்த கோழிக் கூண்டும்!

கல்வீடாய் மாறிப்
போனப் பின்
காணாமல் போயின கல்யாண முருங்கையும்
காந்தள் பூக்களும்!

யாருமில்லாத அங்கு
இப்போதும் இருப்பவை
பெத்தவங்க நினைவுகளும் அவர் தந்த நேசங்களும்
மட்டுமே!

மா.மனோகரன்



கை நீட்டி தன் பசியை
வாங்கிக்கொள்ள கேட்டார்
அந்த முதியவர்
எவரும் வாங்காமலே
முகத்தை திருப்பிக்கொண்டார்கள்
பசி போய்
அவருக்கு மயக்கம் வந்தது
நீண்ட நேரத்திற்கு பிறகு
தயங்கியே
தண்ணீரை தெளித்தார்கள்
கண்டுகொள்ளாத அன்பிற்கு
உயிரை பிச்சை தந்தவர்
ஆம்புலன்ஸ் வரும்வரை
போதையிலிருக்கும்
குடிகாரனாகத்தான் தெரிந்தார்

நயினார்



அருளிரைக்கப்பட்ட அத்தனைக்குள்ளும்
சூழ்ந்திருந்தது
சபிக்கப்பட்ட சாயங்காலப் பசலை
வறண்டு உலரப்பட்ட
தசையின் வெடிப்புகளில்
ஜீவிதத்தின் வேட்கை
நிரைகளின் கத்தல்களில்
நின்றுலவுகிறது
நினைவின் நினைவுகள்
வல்லாத துக்கங்கள்
பெருந்தாககங்கொண்ட பாலையில்
கனியும் விடுதலை
கைப்பிடி நீரில் நிறைந்துகொள்ளும்
ரகுமானே.

✔ கருவை ந.ஸ்டாலின்

நீயும் நானும்
சேர்ந்து வரைந்த
ஓவியத்திற்கு
வண்ணம் தீட்டிக்
கொண்டிருக்கிறது
வெட்கம்
சிவப்பாய்
*

காரணம்
இல்லாவிட்டாலென்ன
கடைசியாய் நீ செய்யும்
சமாதானத்திற்காகவே
சண்டையிடுவோம் வா...
*

அணைக்கையில் பற்ற
வைக்கும் அதிசய தீக்குச்சி
உன் விரல்கள்...
*

உன்னில்
பாதியாகும்பொழுது
என் ஜென்மம்
முழுமையாகக்
கண்டேன்

✔ நித்யா



ஏசுவிற்குப் பதிலாகப்
பசியினைச்
சிலுவையில்
அறைந்திருந்தால்
சாலையோரத்தில்
நடைபிணமாய்க் கிடக்கும்
பாதிப்பேர்
உயிர்த்தெழுந்திருப்பார்கள்...

✔ எஸ்.பிரேமதாஸ்



## அம்மா

கருவிலிருந்தே
பசிக்கும்
போதெல்லாம்
உணவாகிறாள்.

அன்பு
கருணை
பாசம்...
பலபொருள்
குறித்த
ஒரு திரிசொல்
*அம்மா*

பெரிய பாடகியில்லை
எல்லாப்பாட்டும்
ஒரே ராகத்தில்
பாடுகிறாள்
மெய்மறக்கிறேன்
உறக்க ஊஞ்சலாடுகிறேன்
வாய்பாட்டு
தாய் பாட்டு...

வழிய எண்ணெய்
தடவி
அழுந்த கன்னம் பிடித்து
பக்க வகிடெடுத்து
தலைமுடி சீவ
கிரீடம் முளைக்கும்.



உனக்கு பிடித்த
நவாப்பழ நிறத்தைப்
பார்க்கும் போதெல்லாம்
எனதருகே நீ...

மஞ்சள்
முகத்து
குங்குமம்
சந்திரன்
இட்ட
சூரிய பொட்டு

எண்ணிக்கையை
மறந்துவிட்டேன்
வட்ட நிலவாய்
தேய் பிறைகளற்ற
தோசைகள் வந்துகொண்டே
இருக்கிறது
செல்ல தோசை
செல்ல வயிற்றில் இடமில்லை.

எல்லாக் கோயில்
அம்மன்களும்
அம்மாவின் சாயலில்...

நான் மழையில்
நனைந்ததற்கு
மழையைத்
திட்டுகிறாள்.

அம்மாவின்
அஞ்சறைப்பெட்டியின்
ஓர் அறையில்
அன்பிருந்தது.

நான்
மகன்
அப்பா
தாத்தா ஆனேன்...
அது எப்படி?
அம்மா மட்டும் எப்போதும்
அம்மாவாகவே
இருக்கிறாள்!

நரேன்



எவ்வளவுநேரம்
வாசலிலேயே
நின்றிருந்ததெனத்
தெரியவில்லை.
வாளித்தண்ணீரை
அவள் விசிறியடித்ததும்
இருண்டு போய்
முகம்துடைத்தபடி
மெல்லப்போகிறது
வெயில்.

✔ ஆனந்தபிரபு. கௌ

பழைய கல்லறைகள்
நிரம்பிய தோட்டத்தில் புதிதாகத்
தோண்டப்படும் குழி

கல்லறைகள் எங்கும்
காத்திருக்கும் காகங்கள்
சிலுவைகளில் அமர்ந்து

மயாண ரதம் ஒன்றில்
பாடலுடன் பவனி வரும்
வயதானவர் பேருடல்

சிந்திக்க தேடும்
இடத்தில் நிறைந்திருக்கும்
மானுட உடல்கள்... மயானம்

புதைத்த இடத்தின்
வெளியே மும்முரமாக பார்க்கப்படும்
வரவு செலவு கணக்குகள்

✔ ஜவஹர்




இங்கிருந்துதான் பின்தங்கிய கடவுள் புறப்பட்டார்
ஒரே வெயில்.
வெயில் என்பதற்காக படுத்து தூங்கிவிட முடியுமா?
மூட்டைத் தூக்கனும்
கல் சுமக்கனும்
பல படிகள் ஏறி இறங்கனும்.
ஒரு நாள்
கடவுள் மயங்கி விழுந்தபோது
குடியுரிமை வழுவாக இருப்பதாக
அரசாணை வெளியிட்டார்கள்
கடவுளைப் பாருங்கள்
தனக்கு உழைப்பதாக
நினைத்துக்கொண்டே
எந்நேரமும் யாருக்கோ உழைத்துக்
கொண்டிருக்கிறார்.
தெருவில் நடக்கும் எம்மான்
தங்கத்தேரா கேட்க போகிறான்.
அதில்லை
கம்மங்கூழோ
தர்பூசணியோ போதும்
வெயிலில் கடவுள்தான்
வெந்து சாகிறான்
நீங்கள் யாரும் சாக வேண்டியதில்லை
எல்லோருக்கும்
நன்றாகத் தெரியும்
கடவுள் இப்போது ஓட்டுப்போட பயன்படுவார்.

✔ குமரன் விஜி



எல்லாவற்றையும் கடந்தும்
உன் கால்களிலேயே மண்டியிடத்தோன்றுகிறது
இந்த வாழ்தல்
உன்னைத்தவிர ஒரு ஆத்ம அமைதி வேறெங்கும்
கிடைத்திராதபோது
நீ தானே என் எல்லாமுமாவாய்
நீ தொலைந்து நான் எங்கிருப்பேன் என்பது எனக்கே
தெரியாத போது
இந்த காதலை பற்றிக்கொண்டு
எல்லாவலிகளும் கடந்து
காற்றுப்போல
சிலதூரமாவது கடந்து வந்த பிறகு
நீயற்று நடக்க நினைத்தநொடி
பாறை ஒன்று தலைமேல் வைக்கப்படுகிறது
இந்த கைகளை பற்றிக்கொள்ளேன்
எது ஒன்றாகவும் இருக்கட்டும்
ஆனால் நீ இரு
நான் இருப்பதற்காய்

குபோதினி

# படைப்பு நூல் நிலையம்



## கிடைக்கும் நூல்கள்

- படைப்பு பதிப்பக நூல்கள்
- வம்சி பதிப்பக நூல்கள்
- அகநி பதிப்பக நூல்கள்
- சுவடு பதிப்பக நூல்கள்
- யாளி பதிப்பக நூல்கள்
- வாசகசாலை பதிப்பக நூல்கள்
- பொள்ளாச்சி இலக்கிய வட்ட நூல்கள்
- வேரல் பதிப்பக நூல்கள்

**நூல்கள் பெற: 73388 97788 / 73388 47788**

padaippu admin@padaippu.com www.padaippu.com